**OS**.**No**. 323/2019

**PW**1 – முத்துசாமி கவுண்டர்   த/பெ. பழனிசாமி

நாள். 15.07.2024

<u>வாதி தரப்பில் சாட்சி  மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில்  குறுக்கு விசாரணை</u>

1. எனக்கும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் என்ன தொடர்பு என்றால் நான் எனது கட்டிடத்தை அவர்களுக்கு வாடகைக்கு விட்டுள்ளேன்.  மேற்படி சொத்து இருக்கும் இடத்தின் பெயர் எஸ்.பி.ஏ காம்பௌன்ட் ஆகும். கட்டிடத்தின் மொத்த பரப்பளவு 30 சென்ட். எவ்வளவு சதுரடி 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு வாடகைக்கு விட்டுள்ளதாக சொல்கிறேன் என்றால் 6000 சதுரடி. மேற்படி பிரதிவாதிகள் என்ன பெயரில் நிறுவனம் நடத்தி வந்தார்கள் என்றால் பெயர்கள் தெரியாது. மேற்படி கட்டிடத்தில் எந்த ஆண்டு தீ விபத்து ஏற்பட்டது என்றால் 10.3.2018. மேற்படி கட்டிடம் உள்ள பகுதியில் மீதமுள்ள 6000 சதுரடியில் நானும் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி தீ விபத்து பின்னிட்டு தொடர்ந்து அந்த இடத்தில் நான் தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. மேற்படி தீ விபத்தில் சேதம் அடைந்த இயற்திரங்கள் அனைத்தும் தற்போதும் அதே இடத்தில் உள்ளது என்றால்இரண்டு இயந்திரங்கள் இன்சூரன்ஸ் நிறுவனம் எடுத்துச்சென்றுவிட்டார்கள். மீதமுள்ளஇயந்திரங்கள் தான் உள்ளது. மேற்படி பிரதிவாதிகள் தீ விபத்திற்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்பாக கட்டிடத்தில் வாடகைதாரர்களாக இருந்தார்கள் என்றால் மூன்றரை ஆண்டுகள்.

2. மேற்படி பிரதிவாதிகளுக்கு வாடகைக்கு விட்டு இருந்த 6000 சதுரடிகளும் எனது சுவாதினத்தில் இருந்த 6000 சதுரடியும் தற்போது எனது சுவாதினத்தில் உள்ளது என்றால் சரிதான்.நான் சுவாதினத்தில் இருந்த 6000 சதுரடியில் எஸ்.பி.ஏ Exports என்ற பெயரில் ஏற்றுமதி நிறுவனம் நடத்தி வந்தேன். மேற்படி நிறுவனத்தில் சுமார் 15 இயந்திரங்கள் இருந்தது. அனைத்து இயந்திரங்களும் காப்பீட்டு செய்யப்பட்டிருந்தது என்றால் ஆமாம். மேற்படி காப்பீட்டு நிறுவனத்தின் பெயர் New India Insurance. 1 முதல் 4 பிரதிவாதிகள் நடத்தி வந்த நிறுவனத்தில் அவர்கள் இயந்திரங்கள் வைத்திருந்தார்கள் என்றால் அதை பற்றி தெரியவில்லை. மேற்படியார்கள் என்ன என்ன  இயந்திரங்களை வைத்திருந்தார்கள் என்று எனக்கு தெரியாதா என்றால் நிட்டிங் மிசின் வைத்திருந்தார்கள். மேற்படி நிட்டிங் மிசின் ஒவ்வொன்றும் எவ்வளவு எடை

இருந்திருக்கும் எ ன்றால் அவர்கள் புதியதாக மிசின் வைத்திருந்தார்கள் எடை எனக்கு தெரியாது. நான் வைத்திருந்த பழைய இயந்திரத்தின் எடை 500 கிலோ இருக்கும். ஒவ்வொரு மிசினும் தருவித்து எங்கள் கம்பெனியில் பொருத்துவது கிரேன் உதவியுடன் தான் பொருத்த முடியும் என்றால் ஆமாம்.

3. எனது நிறுவனத்தை யார் கவனித்து வந்தார்கள் என்றால் நான் தான் நிர்வாகம் செய்தேன். என் மகன் எனது நிறுவனத்தில் என்ன வேலைசெய்து வந்தார்என்றால் எனது வேலையில் பங்கு எடுத்து வந்தார். பிரதிவாதியுடன் ஒப்பந்தம் ஏற்பட்டது குறித்தும் வாடகை குறித்தும் எனது மகனுக்கு தெரியும் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்துப்பார்த்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் ஆமாம். எனது பிரமாண வாக்குமூலத்தில் 6 வது பக்கத்தில் 24.7.2014 26.6.2014 மற்றும் 7.1.2017 என்ற தேதியிட்ட வாடகை ஒப்பந்தங்கள் என்று சொல்லப்படுகின்றவைகளை தயாரித்து கொண்டு 4 வது பிரதிவாதி அவைகளில் சாட்சியாக இருந்துள்ளேன் என்றால் அவ்வாறு தான் சொல்லியுள்ளேன்.,ஆனால் 24.7.2014 தேதியிட்ட ஒப்பந்தம் தான் நான் தயாரித்தது. தீ விபத்து ஏற்பட்டதால் எனது நிறுவனத்தில் இருந்த இயந்திரங்களுக்கும் மேற்படி பிரதிவாதிகள் நிறுவனத்தில் இருந்த இயந்திரங்களுக்கும் சேதம் ஏற்பட்டது என்றால் ஆமாம். காப்பீட்டு அதிகாரிகள் எனது நிறுவனத்தில் தீ விபத்தினால் ஏற்பட்ட இயந்திரங்களை பார்வையிடுவதற்கு அனுமதித்தேனா என்றால் ஆமாம். பிரதிவாதிகள் நிறுவனத்தில் காப்பீட்டு அதிகாரிகள் பார்வையிட நான் அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. அனுமதித்தேன். அதன்பேரில் தான் இயந்திரங்களை அவர்கள் எடுத்து சென்றார்கள்,

4. மேற்படி பிரதிவாதிகள் நிறுவனத்தில் காப்பீட்டு அதிகாரிகள் ஆய்வு செய்வதை நான் இடையூறு செய்ததால் அவர்கள் எனக்கு எதிராக திருப்பூர் நகர் வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் நான் வாடகை கேட்டேன் கொடுக்க முடியாது என்று சொல்லி பொருள் எடுக்க நான் இடையூறு செய்ததாக புகார் கொடுத்தார்கள். நான் அவ்வாறு பொருள் எடுக்க இடையூறு செய்தேன் என்றால் வாடகை கொடுக்காமல் பொருள் எடுக்கக்கூடாது என்று சொன்னேன். விபத்தானது மார்ச் மாதம் நடந்தது. அதற்கு முந்தைய பிப்பரவரி மாதம் வரை உண்டான வாடகையை அவர்கள் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.07.15 18:18:35 +1300

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.